








We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## OCTOBER

*We Are Here..!! To Guide You..!!*











# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (Current Affairs)

## அக்டோபர் - 11.10.2018


Main Office @

**Weshine Study Circle**

Chromepet, Chennai

Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விருதுகள்
- நியமனங்கள்
- முக்கிய தினங்கள்










# இந்திய நிகழ்வுகள்

- சர்வதேச நாடுகளின் சபையான ஐ.நா., இந்தியாவுக்கான நிலையான வளர்ச்சி இலக்குகள் எனப்படும் **SDS (Sustainable Development Goals)** இன் முதல் இளம் வர்த்தக சாம்பியனாக (First Youth Business Championship) **மானசி கிர்லோஸ்கரை** (Manasi Kirloskar) தேர்வு செய்துள்ளது.
    - இதன்மூலம் இவர், நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைய மற்ற இளம் தலைமுறைகளை ஊக்குவிப்பார். மேலும், பருவநிலை மாற்றம், பிளாஸ்டிக் மற்றும் குப்பைகளை சுத்திகரித்தல், பெண்ணுரிமை போன்றவற்றில் ஐ.நா.வுடன் இணைந்து செயல்பட உள்ளார்.

- இந்தியாவின் முதல் **'மெத்தனால் சமையல் எரிபொருள் திட்டம்' (India's First Methanol Cooking Fuel Program)**, அசாம் மாநிலத்தில் **நாம்ரூப்** நகரில் அசாம் பெட்ரோலிய நிறுவனத்தால் தொடங்கப்பட்டுள்ளது.
    - இந்த திட்டம் நிதி ஆயோக் (NITI Aayog) மூலம் ஊக்குவிக்கப்படுகிறது.

# உலக நிகழ்வுகள்

- சுற்றுலாத் துறையில் இருதரப்பு ஒத்துழைப்பை அதிகரிப்பது, சுற்றுலா தொடர்பான தகவல்கள் மற்றும் தரவுகளைப் பரிமாறிக் கொள்வது, சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறையில் முதலீடுகளை அதிகரிப்பது தொடர்பான ஒப்பந்தத்தில் **இந்தியா மற்றும் ருமேனியா** நாடுகளுக்கிடையே கையெழுத்தாகி உள்ளது.
    - இந்தியாவின் சுற்றுலாத் துறையின் வளர்ச்சியில் ருமேனிய நாடு முக்கிய பங்கு வகிப்பது குறிப்பிடத்தக்கது.

- அரபிக் கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலம் புயலாக மாறி உள்ளது. அந்தப் புயலுக்கு **“லூபன்”** என பெயரிடப்பட்டுள்ளது.
    - ஓமன் நாடு இப்பெயரை வைத்துள்ளது. ஓமனி மொழியில் **“லூபன்”** என்றால் **சாம்பிராணி மரத்தைக்** குறிக்கும் **(Frankincense Tree)**
    - இதேபோன்று, அமெரிக்காவின் புளோரிடா மகாணத்தை பயங்கர காற்றுடன் தாக்கவிருக்கும், அட்லாண்டிக் கடல் பகுதியில் உருவாகியிருக்கும் புயலுக்கு “மைக்கேல்” எனப் பெயரிடப்பட்டுள்ளது.
- குறிப்பு:
    - வங்கக் கடலில் உருவாகியிருக்கும் **புயலின் பெயர் - “தித்லி”** இப்பெயரை பாகிஸ்தான் வைத்துள்ளது. இப்புயலானது ஆந்திரா-ஒடிசா கடற்கரையை அக்டோபர் 11 அன்று கடக்கிறது.

## விருதுகள்

- மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சகம் பல்வேறு பிரிவுகளின் கீழ், ஸ்வச்சதா ஹை சேவா **(Swachhta Hi Seva)** என்ற கணக்கெடுப்பை அடிப்படையாகக் கொண்டு **தூய்மையான வளாகத்திற்கான தரநிலைகளை (Swachh Campus ranking)** அறிவித்துள்ளது.
    - தூய்மையான தொழில்நுட்ப நிறுவனங்கள் என்ற பிரிவில் கோயம்புத்தூரைச் சேர்ந்த **அம்ரிதா விஸ்வ வித்யபீடம்** முதலிடம் பிடித்துள்ளது.
    - தூய்மையான அரசுப் பல்கலைக்கழகங்கள் பிரிவில் ஹரியானா மாநிலத்தின் மகரிஷி தயானந்த பல்கலை கழகமும், தனியார் பல்கலைக்கழகங்களுக்கான பட்டியலில் புனேவின் சிம்பயாசிஸ் சர்வதேச பல்கலைக்கழகமும் முதலிடத்தில் உள்ளது.

- **இந்திய மெடல்கள் மற்றும் ∴.பெரோ** அலாய்ஸ் Indian Metals and Ferro Alloys நிறுவனத்தின் அறக்கட்டளைப் பிரிவால் (IMPacT) வழங்கப்படும் உயரிய விருதான, 2018ம் ஆண்டிற்கான 26வது ஏகலபியா விருது (Ekalabya Award – 2018) ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த ஹாக்கி வீராகனை லீலிமா மின்ஸ் பெற உள்ளார்.

## நியமனங்கள்

- இந்திய தலைமைப் புள்ளியியல் அலுவலராக 'பிரவீன் ஸ்ரீவஸ்தவா' (Chief Statistician of India) நியமிக்கப்பட்டுள்ளார் முன்னதாக இப்பொறுப்பில் இருந்த டி.சி.ஏ ஆனந்த், என்பவருக்குப் பதிலாக இவர் நியமிக்கப்பட்டுள்ளார் பிரவீன் ஸ்ரீவஸ்தவா, 2020 ஆகஸ்ட் வரை அப்பதவியில் இருப்பார்.
    - இந்திய புள்ளியியல் துறைதான் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP – Gross Domestic Product), பணவீக்கம் உள்ளிட்ட பல்வேறு தேசிய முக்கியத்துவம் வாய்ந்த புள்ளி விவரங்களை சேகரித்து, ஆய்வறிக்கையாக வெளியீட்டு வருகிறது.

- மத்திய அரசின் தலைமை வழக்கறிஞர் வரிசையில் அட்டானிக் ஜெனரலுக்கு அடுத்தபடியாக உள்ள சொலிசிட்டர் ஜெனரல் பதவிக்கு, **"துஷார் மேத்தா"** என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
- குறிப்பு:
    - தற்போதைய அட்டானிக் ஜெனரல் - K.K. வேணுகோபால் அட்டானிக் ஜெனரல், இந்திய குடியரசுத் தலைவரால் அரசியலமைப்பு சட்ட விதி 76-ன் படி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

We Shine Academy™

# முக்கிய தினங்கள்

- உலக மனநல தினம் **(World Mental Health Day)** – அக்டோபர் 10
  - உலகம் முழுவதிலும் மனநலம் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துவதற்காக ஆண்டுதோறும் அக்டோபர் 10ம் தேதி உலக மனநல தினமாக கடைபிடிக்கப்படுகிறது.
  - இத்தினமானது 1992ம் ஆண்டு முதல் கொண்டாடப்பட்டு வருகிறது.
  - 2018ம் ஆண்டிற்கான உலக மனநல தினத்துக்கான கருப்பொருள் - “Young people and Mental Health in a Changing World”
- குறிப்பு:
  - உலக சுகாதார அமைப்பு, உலக நல மருத்துவ அமைப்பு, இந்திய மனநல மருத்துவ சங்கம் போன்றவற்றின் அறிவுறுத்தலின் பேரில் இந்தியாவில் உலக மனநல பாதுகாப்பு வாரம் அக்டோபர் 4 முதல் அக்டோபர் 10 வரை கடைபிடிக்கப்படுகிறது.